[16th August 1963

கிடைக்கவில்லை. அதன் காரணமாக 'மெல்டிங் ஸ்க்ராப்' வாங்கி, அதை உருக்கி நாம் 'பில்லெட்ஸ்' செய்து அதன் மூலம் 'ரீ-ரோலிங் மில்' வைக்கலாம் என்பது பற்றி இப்பொழுது பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். அதனால்தான் பரிசீலனை நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னேன்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு போனாலும், மறு ஆண்டிலாவது இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஜோஸ்யம் சொல்லுவது எங்களுடைய கடமை அல்ல.

இரும்புத் தாது (செங்கற்பட்டு மாவட்டம்)

* 163 கேள்வி.—**திரு. செ. கோ. விசுவநாதன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செங்கற்பட்டுக்கு அருகேயுள்ள அம்மணம்பாக்கம் கிராமத்தில் இரும்புத் தாது கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

(இ) அது சம்பந்தமாய் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No Sir,

(*b*) Does not arise.

நவீன வசதி ஓட்டல் (சென்னை)

* 164 கேள்வி.—**திரு. ராம. அரங்கண்ணல் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அடையாறு ஊரூர்குப்பத்துக்கருகில் மேற்கத்திய முறையில் ஒரு மிகப்பெரிய ஓட்டல் கட்ட தனிப்பட்ட ஒருவர் முன்வந்திருப்பது உண்மையா ?

(இ) அந்த ஓட்டலுக்காக எத்தனை ஏக்கர் நிலம் தேவை என்று வீட்டுவசதி போர்டிடம் கோரப்பட்டது ?

(உ) அதுபற்றி வீட்டு வசதி போர்டு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) 25–30 acres.

(*c*) The State Housing Board addressed the Government in the matter. The Government have advised the State Housing Board to set apart an area of ten acres in its South Madras Neighbourhood, and to sell the land in auction, or by inviting tenders.